உ
சிவமயம்

பூரணி



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை இறுதிக்கால
வதிவிடமாகவும் கொண்ட

# அமரர். சரஸ்வதி தணிகாசலம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவுமலர்

13.02.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ
சிவமயம்



அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும்
திருகோணமலையை இறுதிக்கால வதிவிடமாகவும்
கொண்ட

அமரர்

# சரஸ்வதி தனிகாசலம்

அவர்களின் நினைவு மலர்

13.02.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

ஒரு கணமும் எமைப் பிரிந்து
வாழ நினைக்காத எங்கள்
அன்புத் தெய்வம எதிர்பாராமல்
எம்மை விட்டு பிரிந்து
சென்றுவிட்ட நிலையில்
அவரின் நினைவுத் துளிகள்
சிலவற்றை புத்தகவடிவில்
அச்சிட்டு அவரிற்கு
சமர்ப்பணம் செய்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

| மண்ணகம் | விண்ணகம் |
| --- | --- |
| 23 | 14 |
| 06 | 01 |
| 1930 | 2021 |



அமரர்

# சரஸ்வதி தணிகாசலம்

## திதி நிர்ணய வெண்பா

சார்வரித் தைமாத வளர்பிறை துதியையில்
பார்தனில் வாழ்வதை முடித்தே – ஏகினள்
சேர்புகழ் பூத்த குலத்தின் விழுதாய்
ஊர்போற்றிட வாம்ந்திட்ட சரஸ்வதியாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந்தேன் இனிப்பிற
வாத தன்மை வந் தெய்தினேன்
கற்ற வர் தொழு தேத்துஞ் சீர்கறை
யூரியற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வா உனை நான் மறக்கினுஞ்
சொல்லும் நா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியமுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றி பொருளும் ஆகிப்
போதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாய் நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாமாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமா தான சற்குணநேயா
ஒப்பிலாமாமணிக் கிரிவாசா
வித்தகா ஞான சத்திநிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சரஸ்வதி அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் சில பக்கங்கள்



துன்னாலையைச் சேர்ந்த இளையவர் முத்தையா என்பவருக்கும் நாகர்கோவிலை வதிவிடமாகக் கொண்ட ஆழ்வார் அமராவதிக்கும் சிரேஷ்ட புத்திரியாக 23.06.1930 இல் அமரர் சரஸ்வதி அவர்கள் பிறந்தார். அவரது தந்தையார் லோகநாயகி என பெயர் சூட்ட விளைந்த நேரத்தில் தாய்மாமனால் கலைகளின் தெய்வமான சரஸ்வதி என்ற பெயர் முந்திக் கொண்டு பதியப்பட்டு விட்டது. அதே சமயம் அவரது அப்பப்பா அவரை சிறு வயதில் பூரணி என அழைப்பார் என்று உறவினர்கள் கூறியுள்ளனர்.

அழகிய வதனத்துடனும் துள்ளலும் சுறுசுறுப்பாகவும் வளர்ந்த இவர் சிறுவயது முதல் கொண்டு சிறந்த இறைபக்தையாக வாழ்ந்ததுடன் கடவுளுக்கு அஞ்சி நடந்தார்.தனது ஆரம்பக் கல்வியை துன்னாலை காசிநகர் வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் கற்றார். சிறுவயது முதற்கொண்டே தனது சிறிய தாயார் அவர்களின் வழிகாட்டலில் தையல் கலையில் மிகுந்த ஈடுபாடு உடையவராக விளங்கி வளர்ந்த பின் தையல் கலையின் சகல நுட்பங்களையும் கற்றுணர்ந்து சிறந்த ஆடை வடிவமைப்பாளராக திகழ்ந்தார்.

கண்கண்டதை கைசெய்யும் ஆற்றல் அவரது தந்தைவழி வந்த திறமையாக அமைய பன்னவேலைகள், நெசவு, நடன வடிவமைப்பு, இதர கைப்பணிகள் யாவற்றிலும் ஈடுபாட்டுடன் செயற்பட்டார். அக்காலத்தில் நிலவிய சூழ்நிலைகள் காரணமாக உயர் கல்வி கற்கக் கூடிய வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்பட்டிருக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அன்னாரின் தாய் வழியிலும் தந்தை வழியிலும் மாமன்மார் ஐவரும் சிறிய தாய் ஒருவரும் சிறிய தந்தைமார் மூவரும் மாமியார் ஒருவரும் இருந்துள்ளனர். இவர்களுள் இற்றை வரை தனது 98 வயதில் தடம் பதித்து இரும்பு என செல்லமாக அழைக்கப்படும் இராசையா என்பவர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்களுக்கு இரண்டு தம்பிகளும் இரண்டு தங்கைகளும் இருந்துள்ளனர். அவர்களுள் மூவர் அம்பிகாபதி, பூலோகநாயகி, சர்வேந்திரன் ஆகியோர் சிறுவயதில் நோய் காரணமாக இறந்து விட ஒரு தங்கை சர்வேந்திரவதி மட்டும் இளமைப்பருவத்தில் இறைவனடி சேர்ந்தார். இந்தத் தங்கையின் இழப்பைத் தொடர்ந்து தாயாரும் இறந்து விட தனிமரமாக தனது கணவருடன் தவித்திருந்தார். தாயையும் சகோதரர்களையும் இழந்த துயரம் அவரது வாழ்நாள் முழுவதும் நிலவியது குறிப்பிடத்தக்கது.

தனது தாய்மாமன் மகனான அமரர் சிதம்பரம் தணிகாசலம் என்பவரை கரம்பிடித்த இவர் முதலில் ஒரு பெண்மகவைப் பெற்று அதற்கு சதாவாணி என பெயர் சூட்ட இருந்த நிலையில் அம்மகவை இழந்தார். ஒன்பது வருடங்கள் கழித்து பல வேண்டுதல்களுடன் பெண் குழந்தையொன்றை பெற்றெடுத்து அதற்கு தன் தங்கையின் பெயரை சர்வேந்திரா என வைத்து சீராட்டி பாராட்டி வளர்த்தார். 1997 காலப்பகுதியில் கணவரை இழந்த நிலையில் தன் பிள்ளையின் நிழலில் வாழத் தொடங்கினார். திருமண வயதை அடைந்த தன் மகளுக்கு தன் விருப்பப்படி சகோதரர்கள் நிறையப் பெற்ற புகழ்பெற்ற குடும்பமொன்றில் வைத்தியராக பணிபுரியும் கதிரவேல் விஜயகுமார் அவர்களை திருமணம் முடித்து வைத்தார்.

சகோதரர்களின் வலிமை எவ்வளவு தூரம் வாழ்க்கையை உயர்த்தும் என்பதை அனுபவரீதியாக உணர்ந்து தனது மகளுக்கு நிறைய பிள்ளைகள் இருக்க வேண்டுமென இறைவனை மன்றாடி நான்கு பேரப்பிள்ளைகளான ஷியேனி, ஆகர்ஷன், சாருஷ்ணி, அதிஷன் ஆகியோரை பெற்றுக் கொண்டார். தனது பேரப்பிள்ளைகளிடம் பாகுபாடு காட்டாது பாசத்தைப் பொழிந்தார். தனது இறுதிக்காலம் வரை அவர்களின் தோழிபோல விளையாடி மகிழ்ந்தார். அவர்

**"எண்ணிய எண்ணியாங் (கு) எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்"**

என்ற குறளுக்கு அமைவாக வாழ்ந்து காட்டி சில நாட்கள் மட்டும் நோயின் துன்பத்தை அனுபவித்து 14.01.2021 தைப்பொங்கல் தினத்தன்று தனது 91 ஆவது வயதில் தன் பிள்ளை, மருமகன், பேரப்பிள்ளைகள் சூழ்ந்திருந்து கதற இவ்வுலகை விட்டு நீத்தார் .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சரஸ்வதி அக்கா"எங்கள் மச்சாள்

ஏ. ஜி. யோகராஜா (சைவம்)

"சரஸ்வதி அக்கா" இப்படித்தான் நாங்கள் - நான், எனது சகோதரிகள் அமரர்கள் சிவஞானவதி, மங்களாவதி சகோதரர்கள் அமரர் முருகதாஸ், மற்றும் ஞானதாஸ் ஆகியோர் – அவவை அழைப்பதுண்டு. உறவு முறையில் அவர் எங்கள் மூத்த மச்சாள். எங்கள் தாய் வழியிலும் சரி, தந்தை வழியிலும் சரி (மூப்பில், உயரத்தில், மொத்தத்திலும்) இவர்தான் எங்களுக்கு பெரியமச்சாள்.

இவரது தாயார் அமராவதி முத்தையா இவருடன் கூடப் பிறந்தவர்கள் ஐந்து ஆண்களும் ஒருபெண் சகோதரியும். ஆனால் எனது தந்தை ஆழ்வார் காசிநாதர் அவர்களுக்கு இவர் உடன் பிறந்த சகோதரி என்று கூறுவது தகும். ஆம், எனது தந்தையுடன் இரணையாகப் பிறந்தவர்தான் மாமி அமராவதி. அவ்வகையில், "பாசமலர்" படத்தில் சிவாஜி கணேசன், சாவித்திரிக்கு வழிகாட்டியவகையில் தான் அண்ணா தங்கை பாசம் கொட்டிக் கிடந்தது என்றால் மிகையாகாது. எனது தாயார் மணிமேகலையும் விட்டுக்கொடுக்க முடியாத அளவுக்கு மிகுந்த அன்பாகவும் ஆதரவாகவும் திகழ்ந்தார்.

அமராவதி அவர்களின் முதல் மகள்தான் அமரர். சரஸ்வதி தணிகாசலம், இரண்டாவது மகள் அமரர். சர்வேந்திரவதி முத்தையா. இளவயதிலேயே மரணத்தின் வாசலைத் தழுவியவர். சரஸ்வதி அக்காவின் மத்தியகால வாழ்வு மிகுந்த துயரத்தில் துவண்டு போனது, இவரது இளவயது மரணத்தினால! பின், சிலவருடங்கள் கழித்துத்தான் மகள் சர்வேந்திரா குழந்தையாக அவதரித்தார்.

சரஸ்வதி அக்கா ஆரம்பப் படிப்பை துன்னாலை காசிநாதர் பாடசாலையில் ஆரம்பித்து பின், கோப்பாய் பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரியில், பாடசாலை விடுதியில் தங்கியிருந்தபடி தமது மேற் கல்வியைச் செவ்வனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தார். ஆரம்பத்தில் இருந்தே சிறந்தமாணவியாக விளங்கியதுடன், கலை நிகழ்வுகள் அனைத்திலும் தனது திறத்தினை வெளிப்படுத்தியும் வந்தார். இசை, நடனம், தையல், கைப்பணி என்று கலைத்துவக் கல்வி அனைத்துக்கும் உயர்முக்கியத்துவம் வழங்கி தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

வளர் இளம் பருவத்தில் - பதின்ம வயதில் - இருந்தே தனது தந்தையின் நிழலைத் தரிசிக்கும் வாய்ப்பு அரிதாகியது அக்காவுக்கு! ஆம் தந்தை முத்தையா கோயிலைச் சுற்றும் சாமியார் ஆகித் துறவியானார். இருந்தும் ஐந்து மாமன்மாருக்கு மருமகள் என்ற எண்ணமும் செல்லமும் இறுமாப்பும் கூட அக்காவிடமிருந்து நலிந்துவிடவில்லை.

சரஸ்வதி கடாட்ஷம் கிடைக்கப் பெற்றவர் போன்று சிறுவயதிலேயே பல்கலை நுட்பங்களிலும் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். இதனால் வடமராட்சியில் எமது சமூகம் முழுமையும் நன்கு அறியப்பட்ட கலைநுட்ப ஆசியராக விளங்கினார். அதுமட்டுமன்றி தந்தையின் மூச்சுக்காற்று வீச மறுத்த நிலையிலும் சிறந்த மாலுமியாக இருந்து நிறைந்த உறுதியுடன் குடும்பத்தை வழி நடத்தினார்.

ஆண்டு 1958ல் தாய் மாமனாரின் மகன் திரு. சி. தணிகாசலம் அவர்களை வாழ்க்கைத் துணைவராகக் கைப்பிடித்தார். அமரர் அதிபர் தணிகாசலம் அவர்களும் கூட எனது தந்தையின் சகோதரர் ஆழ்வார் சிதம்பரம் அவர்களின் ஒரே மகன். இவருக்கு மூத்தவர் இவரது சகோதரி, பெயர் அமரர் பவளம் முருகேசு அவர்கள்.

1950, 60 களில் அல்வையூர் கவிஞர் மு. செல்லையா அவர்களின் கவிதைகளுக்குக் காட்சிப் புலன்களின் (விசுவல்) வழியே உயிர்கொடுத்தவர் திருமதி சரஸ்வதி தணிகாசலம் அவர்கள். ஆம்!

குறிப்பாக 1954ல் ஸ்ரீலங்காவித்தியாசாலை உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து அல்வையூர் கவிஞர் மு. செல்லையாஅவர்கள் பாடசாலையின் அதிபர் ஆனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட அல்வை ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் நடனம் மற்றும் இசை ஆசிரியராகத் திகழ்ந்தவர் சரஸ்வதி அக்கா. யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான நாடக, நடனப் போட்டிகளில் அல்வையூர் கவிஞர் மு. செல்லையா அவர்களின் நிகழ்வுகள் முதலிடத்தைப் பெறுவது வழமை. அந் நிகழ்வுகளைச் செப்பனிடுபவர் சரஸ்வதி அக்கா. முக்கியமாக பாடல்களுக்கு இசையமைப்பதில், பாடுவதில், நடனங்களை வடிவமைப்பதில், பாத்திரங்களுக்கு ஏற்ப உடைகளைத் (கொஸ்ரியூம்) தயார் செய்யும் தையற் கலையிலும் சிறந்து விளங்கியவர்.

1950 களில் இருந்து அல்வாயில் சிறந்த தையற் கலைஞராக அறியப்பட்ட முதல் தையல் ஆசிரியர் இவர்தான் என்றும் குறிப்பிடலாம். இவ்விதம் தமது இளமைக் காலம் முழுவதும் பன்முக ஆளுமையாக விளங்கிய அற்புதக் கலைஞர் இவர்.

அது மட்டுமன்றி கைவினைப் பொருட்களை, குறிப்பாக பனை ஓலைகள், ஈர்க்குகள், மற்றும் வெட்டுத் துணிகள் போன்றவற்றில் உருவாக்குவதிலும் சிறந்த கை வினைஞராக விளங்கியவர்.

**வஞ்சிக்கப்பட்டவர்...**

இவ்விதமாக, எவ்வித ஒளிவு மறைவும் இன்றி, தனது திறன் முழுவதையும் வெளிப்படுத்தி, பாடசாலைகளுக்கு மட்டுமன்றி, சமூக மட்டத்தில்; சனசமூக நிலையங்கள், கோவில்கள், விளையாட்டுக் கழகங்கள், கலைவிழாக்கள் மற்றும் தனி மனிதர்களின் திருமணவிழாக்கள், சாமத்தியச் சடங்குகளிலும் கூட சரஸ்வதி அக்காவின் கலை வண்ணங்கள் அந் நிகழ்வுகளுக்கு மகுடம் சூட்டும்.

பலவருடகாலமாக இப் பாடசாலைகளில்; கைவினை ஆசிரியராக, இசை – நடன ஆசிரியராகவும் கடமையாற்றி களைத்துப் போன நிலையிலும், அரச ஆசிரிய பதவிக்கான அங்கீகாரத்தை இப் பாடசாலைகள் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு வழங்கியிருக்கவில்லை. சமூக நிறுவனங்களும் கைவினை ஆசிரியருக்குரிய அவரது பதிவியை மடைமாற்றி விட்டிருந்தன. சாராம்சத்தில் சரஸ்வதி அக்கா: கறிக்கு கறிவேப்பிலையாக, பிழிந்தெடுக்கப்பட்ட தேசிக்காயாகவே பயன்படுத்தப்பட்டார். இல்லை! வஞ்சிக்கப்பட்டார்!

**அவர் தோற்றுப் போகவில்லை!**

தமிழரின் ஆரம்பகால திண்ணைப் பள்ளி முறைமையை அடுத்து, ஆங்கிலேயர் வழியில் ஆங்கிலேயர் மூலமாகவே ஈழத் தமிழரின் கல்வி விருத்தியடையத் தொடங்கியது. ஆனால் ஆங்கிலேயர் மூலமாக இக் கல்வியைப் பெறுவதற்கு; முன் நிபந்தனையாக தமிழர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறவேண்டியது கட்டாயம். ஆம்! சுதந்திர (ஆண்டு 1948) காலத்திற்கு முன்புவரை; உயர்கல்வியைப் பெறுவதற்கும் அரச உத்தியோகத்தில் சேர்வதற்கும் இதுவே உகந்த வழியாகவும் சிறந்த உபாயமாயமாகவும் அமைந்திருந்தது. கல்வி மறுக்கப்பட்ட விளிம்பு நிலைச் சமூகங்களுக்கு ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்குக் கூட, இதுவே பெரும் வாய்ப்பாக அமைந்திருந்தது.

அவ் வழியில் யாழ் குடாவில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது தான் தெல்லிப்பளை யூனியன் (கொலிஜ்) கல்லூரி. அடுத்து "ஜவ்னாகொலிஜ்" என்றழைக்கப்படும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வடமராட்சி பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரி. உத்தியோகத்தின் பொருட்டு, ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இணைவதற்காக கிறிஸ்தவ மதத்துக்குமாறிய உறவுகள் பலரை நாம் அறிவோம். ஆங்கிலேயரின் ஆளுமை இலங்கையில் இருந்தவரை கல்வியைப் பெறும் பொருட்டும் இளைஞர்கள் உத்தியோகத்தில் சேரும் பொருட்டும் இத்தகைய போக்குத்தான் இலங்கையில் நிகழ்ந்து கொண்டிருந்தது.

ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பும் இதே நடைமுறை நிலவத்தான் செய்தது. ஆனால் அதற்கான ஆளுமை சக்தி பௌத்தமாக மாறியது. ஆம்! விளிம்பு நிலைச் சமூகங்கள் தமக்கான கல்வி மற்றும் உத்தியோக வாய்ப்புகளை விருத்தி செய்வதற்கு பௌத்தம் துணை நின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகமானதைத் தொடர்ந்து, 1950, 60களில் அனைத்துச் சமூகங்களும் கல்விக்கான வாய்ப்பைப் பெறக்கூடிய சூழல் உருவானது. ஆனால் பாடசாலைக்கும் குடிகளுக்குமான அதிதூர இடைவெளி, பிள்ளைகளின் கல்வியில் பெருந்தடையாக இருந்தமையை, மக்களின் பொருளியல் நிலைமைகளை; அதாவது, ஆண், பெண்ணாக கூலிக்குச் செல்கின்ற சமூகங்களில், பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்குரிய சந்தர்ப்பம் அரிதாகவிருந்த நிலைமைகளை, சமூகத்தில் ஒரு சிலர்மட்டுமே உணர்ந்திருந்தனர்.

1960களில்; நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வழங்கப்படும் கோட்டாக்களின் மூலமாகவே இளைஞர்களுக்கான உத்தியோகங்கள் கையளிக்கப்பட்டு வந்தன. இவ்வழிமுறை அரசியல் ஈடுபாடற்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் கட்சியைச் சாராத படித்த இளைஞர்கள் அரச வேலைகளைப் பெறுவதற்கு பெரும் தடையாக அமைந்தது.

இத்தகைய நடைமுறைச் சூழலை உணர்ந்த இளைஞர்கள் சிலர் பௌத்த சங்கம் ஒன்றை உருவாக்கினர். அதன் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராக திரு.சி.தணிகாசலம் அவர்களும் அவருக்குத் துணையாக துணைவியார் திருமதி.சரஸ்வதி அவர்களும் இணைந்தனர். அதன் ஆதரவுடன் பின்தங்கிய கிராமப்புறங்களில் பாடசாலைகளை அமைப்பதற்கும் விளிம்பு நிலைச் சமூகசங்கத்து படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்குமான முயற்சிகளிலும் தீவிரமாக இறங்கினர்.

இதன் பொருட்டு அல்வாய் வடக்கில் ஒரு பௌத்த பாடசாலையை ஸ்தாபிக்கும் முயற்சியில் முன்னின்றுழைத்தனர் திரு, திருமதி.தணிகாசலம் சரஸ்வதி தம்பதியினர். பத்துப் பரப்புக்கு மேற்பட்ட தமது சொந்தக் காணியை இதற்காக அன்பளிப்பும் செய்தனர். பெண்களும் ஆண்களுமாக விளிம்பு நிலைச் சமூகத்தைச் சேர்ந்த பல வாலிபங்கள் ஆசிரியத் தொழிலைப் பெறுவதற்கும் கால்கோளாக விளங்கினர். இப் பாடலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கத்துக்கும் அரச அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் முன்னின்று உழைத்தவர் என்ற வகையில் ஆனந்த சேமகே பௌத்த பாடசாலை என்று அப் பிக்குவின் பெயரை பாடசாலைக்குச் சூட்டி மகிழ்ந்தனர்.

திரு.தணிகாசலம் அவர்கள் அதிபராக விளங்கிய போதும் சக ஆசிரியருக்கான அரச அங்கீகாரத்திற்கு வழிவிட்டு, பாடசாலை ஒன்றை அமைத்து எமது பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்கியதுடன் இளைய தலைமுறை உறவுகளுக்கு அரச உத்தியோகம் பெற்றுக் கொடுத்தோம். என்ற மனமகிழ்ச்சியுடன் சரஸ்வதி அக்கா தொடர்ந்து தொண்டாசிரியராகவே கடமைபுரிந்தார். இதுவே அவரது வாழ்வின் மிக உன்னதமான அழகான காட்சி!

விளிம்பு நிலைச் சமூகங்களுக்கான பாடசாலை வரலாற்றில் திரு, திருமதி தணிகாசலம் சரஸ்வதி தம்பதிகளின் பெயர்கள் கல்மேல் எழுத்தாக நிலைத்திருக்கும்!

## அற்புதமான மனுஷி!

**வயது 90 ஐக் கடந்த போதும் சரஸ்வதி அக்காவின் குரல் வளம் இளமையோடு திகழ்ந்ததைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். மரணிக்கும் வரை இவரது எண்ணங்கள், பேச்சுக்கள் மற்றும் சிந்தனைகள் கூட தமது பேரப் பிள்ளைகளுடன் பிற்காலத்தைப் போக்கும் வகையில் இளமையாகவே மிளிர்ந்தன! சரஸ்வதி அக்கா தனது பிற்காலத்தை அமைதிக்குள் புதைத்துக் கொண்டார் என்பது தான் உய்த்துணரக்கூடிய உண்மையாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி அக்காவும் அவரது கலை வழவங்களும்

சரஸ்வதி அக்காவின் முகத்தோற்றமும் உடல்வாகும் புன்சிரிப்புத் தவழும் முகமும் வெள்ளையுள்ளமும் எப்போதும் எல்லோர் மனத்திலும் பதிந்திருக்கும். அவரது சமகாலத்தில் வாழ்ந்த, வாழ்ந்து வரும் அல்வாய் வடக்கு மக்களின் மனங்களைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். அவரிடம் பன்முக ஆற்றலைக் கண்டேன். மிகச்சிறிய வயதிலேயே அவரின் தொடர்பாடல் இருந்தது. பின்னர் காலவோட்டத்தில் எங்களுக்கிடையிலான தொடர்புகள் பெரும் இடைவெளியை ஏற்படுத்திற்று

ஆனாலும் அவர் மரணித்த செய்தியை முகநூல் வழியாக அறிந்த போது என் மனம் கலங்கிற்று. எனது இருதய சத்திரசிகிச்சை காரணமாக நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்த்துவரும் காரணத்தால் அவரது இறுதி யாத்திரையில் கலந்து கொள்ள முடியவில்லையே என்ற மன ஆதங்கம் இப்போதும் என் மனதை நெருடுகின்றது. அந்தளவுக்கு அவவின் நினைவுகள் கனவுபோல என் கண் முன்னே வந்து நிழலாடின.

நான் அல்வாய் வடக்கு, ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த வேளை இரண்டாம் வகுப்பிலிருந்து அல்வையூர் கவிஞர் செல்லையா அவர்கள் தனது பாடலை பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளிலும் கலைநிகழ்வுகளிலும் பாட வைத்து பாடசாலைக்கென பல பரிசில்கள் பெற வைத்தவர். அந்தக்காலத்திலேயே பாடசாலை நடன நிகழ்வுகளுக்கும் என்னைப் பாடவைத்தார். அப்போது தான் சரஸ்வதியக்காவின் அன்புக்குரியவனானேன். "தம்பிமகேந்திரம்" என்று தான் அன்பொழுக அழைப்பார். கவிஞரின் பாடலுக்கெல்லாம் நடன வடிவமைப்புச் செய்தவர் சரஸ்வதியக்காதான். அவை சென்ற இடமெல்லாம் பெரும் வரவேற்புப் பெற்றதுடன் பாடசாலைக்குப் பல பரிசுகளையும் பெற்றுக் கொடுத்தது. அல்வையூர் கவிஞரின் இலகு தமிழில் மக்களுக்குச் சென்றடையும் செய்தியை இன்னும் மெருகேற்றிச் சென்றடைய வைத்தவர் சரஸ்வதியக்கா என்றால் மிகையாகாது. உதாரணத்துக்கு வல்வை சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற சுகாதார விழாவின் போது கும்மிப்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தானே தானே தன தன தந்தானே தானே தன
தந்தானே தானே தன தன தனதந்தானே தானே தன
காசு பணம் சேர்ந்து மென்ன – நல்ல
கல்வீடுகள் கட்டியென்ன
பூசும் நகைபூண்டு மென்ன – சுகம்
பேணா வாழ்வு வீணானதே!
தந்தானே தானே தன தன தந்தானே தானே தன
தந்தானே தானே தன தன தனதந்தானே தானே தன
கவுண்மேந்து தாய்பிள்ளையை – நன்கு
கவனிக்கவே வகாசையள்ளி
பவுணாய் செலவு செய்வார் - நல்ல
பாலும் மருந்தும் தந்திடுவார்.
தந்தானே தானே தன தன தந்தானே தானே தன
தந்தானே தானே தன தன தந்தானே தானே தன

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் (இப்போது தேசிய பாடசாலை) பாடசாலைகளுக்கிடையிலான போட்டியின் போது கவிஞரின் வளர்பிறை நூலில் உள்ள பாடலான

"தாங்கும் மடிகிடத்தி குழந்தையின் தண்முகம் பார்க்கையிலே
ஓங்கிய செல்வமெல்லாம் மடியினில் உற்றது போல் மகிழ்வாள்
எண்ணும் மழலை மொழி செவிகளில் ஏறி இனிக்கையிலே
பண்ணும் கசந்துவிடும் சர்க்கரை பாலும் புளித்துவிடும்"

என்று தொடரும் பாடல் மணக்கோலத்தில் தாய் கண்டு மகிழும் வரையான ஒரு அபிநய நடனமாக அமைத்தார். அதில் ஒவ்வொரு பருவத்திற்கு ஒருவராய் என இருபது பிள்ளைகள் வரை கலந்து கொண்ட ஒரு அற்புத நடனம். அதுபோட்டியில் முதலாவதாக வந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்தது என்றால் அத்தனையும் சரஸ்வதியக்காவின் அயராத உழைப்பு என்றே கருதுகிறேன். இந்த நடனப்பாடல்களை என்னோடு சேர்ந்து பாடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய மெல்லிய குரலோடு எனது குரலும் இயைந்து செல்லும். ஏனெனில் நானும் சின்னவனானதால் எனது குரலும் நாலு, நாலரைக்கட்டை சுருதியில் பெண்குரல் போலவே ஒலிக்கும்.

இவர் கவிஞரின் பாடல்களை விட இதர பாடல்களான
"பூனைக்கும் பூனைக்கும் கல்யாணம்
பூலோகம் எங்கும் கொண்டாட்டம்"

"பார் பார் அந்தப் பறவையைப் பார்
பக்கம் வந்து மெல்ல மெல்ல பறப்பதைப் பார்"

"செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவெனச் சிரிக்கும் மலர்க் கொடியாள்"

போன்ற பாடல்களுக்கு நடன வடிவமைப்புச் செய்துள்ளார். அவை பெரும் பாராட்டைப் பெற்றவையாகின. ஆறாம் ஆண்டுக்கு நான் ஹாட்லி கல்லூரிக்குச் செல்ல எங்களுக்குள் ஒரு இடைவெளி உருவானது. ஆனாலும் அது நீடிக்கவில்லை. ஏழாம் ஆண்டு கற்கும் போது ஒருநாள் என் வீட்டுக்கு வந்திருந்தார். அப்போது நான் கல்லூரியிலிருந்து வரவில்லை. அம்மாவிடம் "மகேந்திரம் வந்தவுடனே ஒருக்கால் எங்கள் வீட்டுக்கு அனுப்புங்கோ அக்கா" என்று சொல்லிச சென்றிருந்தார்.

நானும் வந்தவுடன் முகம் கழுவிச் சாப்பிட்டு விட்டுச் சென்றேன். அவர் எனது வரவை எதிர்பார்த்தவராக அவவும் சகோதரி சர்வேந்திரா அக்காவும் இருந்தனர். போனதும் ஒருபாடல் துண்டை என்னிடம் தந்தார். அதற்கான மெட்டையும் எனக்குச் சொல்லித் தந்தார். அன்று மாலை நேர எனது விளையாட்டு நேரம் சரஸ்வதியக்கவோடு கழிந்தது. அடுத்த நாள் எனை அழைத்து பாடும் படி கேட்டார். நானும் பாடினேன். ஒரு திருப்தி அவர் முகத்தில் கண்டேன். ஆயினும் அங்காங்கே சிறுமெருகேற்றினார். அடுத்த ஞாயிற்றுக்கிழமை நடனம் அரங்கேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப்பாடல்,

"கந்தசுவாமியை காண வேண்டுமென்று நெஞ்சு துடிக்குதடி- நல்லூர் கந்தசுவாமியைக் காண வேண்டுமென்று நெஞ்சு துடிக்குதடி"
அதுவும் சென்ற இடத்தில் சிறப்புப் பெற்றது. அதன் பின்னர் அவரும் கணவருமாக "அல்வாய் ஆனந்த சேமகே" தமிழ் சிங்கள பௌத்த பாடசாலையை ஸ்தாபித்து அதன் மூலம் கணவர் தணிகாசலம் அண்ணர் அதிபரானதும் எங்களதும் அயற்கிராமங்களதும் வேலையில்லாதிருந்த இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் ஆசிரிய நியமனம் கிடைக்கவைத்தமை அவர்களின் தன்னம்பிக்கைக்கும் அயராத உழைப்புக்கும் கிடைத்த வெற்றியெனலாம்.

அங்கும் சில நடன நிகழ்ச்சிகளை அவர் அரங்கேற்றிய போது எனது தொடராக என் சகோதரி சத்தியவாணி பாடியமை எனக்கு மிக மன ஆனந்தத்தைத் தந்தது.

அவ்வாறு எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமரிய அக்காவின் மரணம் என்னால் ஜீரணிக்க முடியாதது. ஆனாலும் அவரது மூப்புக்குரியது எனத்தேறுகின்றேன்.

சு.மகேஸ்வரன்
'மதுரா'
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்

**"பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே.**
**உண்மையைச் சொல்லி மாட்டிக் கொள்.**
**ஏனென்றால் பொய் வாழவிடாது. உண்மை சாகவிடாது."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/அல்வாய் ஆனந்த சேமகே வித்தியாலய உருவாக்கத்தில் அமரர்களான தணிகாசலம் – சரஸ்வதி குடும்பத்தினரின் வகிபங்கு

1965 ம் ஆண்டு காலப்பகுதியில் அகில இலங்கை வடபுலத்தில் நான்கு பாடசாலைகள் தோற்றம் பெற்றன. அவை காரைநகர், கரவெட் அச்சுவேலி, அல்வாய் ஆகிய பிரதேசங்களில் அமையப் பெற்றன. அந்த வகையில் அல்வாய் பிரதேசத்தில் அல்வாய் வடக்குப் பகுதியில் அல்வாய் ஆனந்த சேமகே வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலை தோற்றம் பெற்றது. அப்பாடசாலையின் ஸ்தாபகராக அமரர் சிதம்பரம் தணிகாசலம் அவர்கள் விளங்கினார். அவருக்கு உறுதுணையாக அமரர் சரஸ்வதி அவர்களும் செயற்பட்டார். இவர்களால் அல்வாய் வடக்கு பிரதேசத்தில் அமைந்திருந்த வக்கம்பரை என்னும் பெயர் கொண்ட இவர்களதும் இவர்களின் குடும்ப உறவினர்களதும் காணிக்குள் 80' x 20' அடி அளவு கொண்ட கிடுகினால் வேயப்பட்ட நீளமான கொட்டில் அமைக்கப்பெற்று அதில் பாடசாலை இயங்கியது. பின்னரான காலப்பகுதியில் பாடசாலைக்கு அருகிலுள்ள சீனன்சீமா, கிழவியர் சீமா என்றும் காணிகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டன.

இப்பாடசாலையின் ஆசிரியர்களாக அயல் கிராமங்களான புலோலி மேற்கு, புலோலி தெற்கு, அல்வாய் தெற்கு கிராமங்களைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தர சித்தி பெற்ற இளைஞர்கள் சிலரும் யுவதிகள் சிலரும் அல்வாய் வடக்கைச் சேர்ந்தவர்களையும் ஆசிரியர்களாக அமரர்களான தணிகாசலம் சரஸ்வதி குடும்பத்தினர் இணைத்துக் கொண்டனர். இப்பாடசாலையின் பொறுப்பாசிரியராகவும், அதிபராகவும் அமரர். சி. தணிகாசலம் அவர்கள் செயற்பட்டார். அமரர்.சி.தணிகாசலம் அவர்கள் இலங்கை பௌத்த காங்கிரசின் முன்னோடியாகத் திகழ்ந்த ஆனந்தசேமகே என்னும் பெரியாரின் அனுசரணையோடு இப்பாடசாலையை நிறுவினார்.

இப்பாடசாலையில் அயல் கிராம மாணவர்களும், சுற்றுச் சூழலில் உள்ள மாணவர்களும் கற்றலுக்காக இணைந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையில் இணைந்திருந்த ஆசிரியர்கள் அனைவரும் எவ்விதமான வேதனமுமின்றி தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி வந்தனர்.

இவ்வாறு இப்பாடசாலை இயங்கி வரும் காலமதில் 1968 ம் ஆண்டு இப்பாடசாலை அரசாங்க பாடசாலையாக கல்வி அமைச்சாலும் அரசாங்கத்தாலும் அங்கீகரிக்கப்பட்டது. அதன் நிமித்தம் அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றிய அரச நியமனம் பெற்ற அதிபர், சிங்கள மொழி கற்பிக்க தமிழ்மொழி தெரிந்த சிங்கள ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டனர். அங்கு தொண்டர் ஆசிரியராக கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு நூறு ரூபா அலவன்சாக மாதந்தோறும் வழங்கப்பட்டிருந்தது. இப்பாடசாலை ஆரம்பத்தில் ஆரம்பப் பாடசாலையாகவும், பின்னர் கனிஷ்ட வித்தியாலயமாகவும் இயங்கி வந்தது. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் தமிழ் மொழி மூலக் கல்வியாகவும் சிங்கள மொழி ஒரு பாடமாகவும் கற்பிக்கப்பட்டன. இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் அரசாங்க நிதி ஒதுக்கீட்டில் 60' x 20' பிரமாணத்தில் ஒரு அறையுடன் கூடிய கட்டிடம் கட்டப்பட்டது.

இங்கு கடமையாற்றிய எட்டு தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் 1972 ம் ஆண்டு காலப்பகுதியில் அரச நியமனம் பெற்று வேறு அரசாங்க பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அரசாங்க ஆசிரியர்களாக பணிபுரிந்தனர். தொடர்ந்து இயங்கி வந்த பாடசாலையில் மாணவர்கள் குறைவாக உள்ள காரணத்தால் யா/ ஆனந்த சேமகே வித்தியாலயம் மூடப்பட்டது. இப்பாடசாலையின் உருவாக்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் அமரர்களான தணிகாசலம் - சரஸ்வதி தம்பதியினர் எனக் கூறிக் கொள்ளலாம்.



கி. கணேசன்
ஓய்வு நிலை அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி அக்காவின் வரவேற்பு நடனமும் வரவேற்ற சகோதர மொழி ரசிகர்களும்

இரா . சிவரத்தினம் - கனடா

60, 70 களில் அல்வாய் வடக்குப் பகுதியில் சரஸ்வதி என்று பெரியவர்களாலும் சரஸ்வதி அக்கா என்று இளையவர்களாலும் அழைக்கப்பட்டவர் தான் திருமதி. தணிகாசலம் சரஸ்வதி அவர்கள். அதிகமாக சரஸ்வதி என்ற பெயருடையவர்களை சரசு என்று தான் அழைப்பார்கள் ஆனால் இவரை ஒருபோதும் யாரும் அப்படி அழைத்ததாக நான் கேள்வியுறவில்லை. அதிலிருந்து ஒன்று தெரிவது அவர் முழுமை பெற்றவர் என்பது மேலும் அவரிடம் பல துறைசார் ஆளுமை பெற்றிருந்தன. தையற்கலை, பன்னவேலை கைப்பணி, நடனம், பாலர்களுக்கான கல்வி போதித்தல் போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

தீபாவளி, தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு போன்ற கொண்டாட்ட காலங்களில் ஊரவர்கள் அவரது வீட்டில் வரிசை கட்டி நிற்பதைப் பார்க்கலாம். அந்த நேரங்களில் பேசப்பட்ட ஒரு தையற்கலை வித்தகராக இருந்தார். யார் மனமும் புண்படாமல் அவரவர் மன இசைவுகளுக்கு ஏற்ற விதத்தில் உடுப்புக்களைத் தைத்துக் கொடுப்பதினாலேயே இந்த வரிசைகள் இருந்தன. அத்தோடு மட்டுமல்லாமல் தையற் பயிற்சி வகுப்புகளும் நடாத்தினார். அதில் பங்கு பற்றிய பலர் நல்ல தையற்காரர்களாகவும் பின்நாளில் இருந்திருக்கிறார்கள்.

அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கவிஞர் மு. செல்லையா அவர்கள் தலைமை ஆசிரியராக இருந்த காலங்களில் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் நடன, நாடகப் போட்டிகள் நடைபெறுவது வழமையாக இருந்தது. கூடுதலான போட்டிகளில் ஸ்ரீலங்கா வித்தியாசாலையே முதலிடம் பெறும்.

கவிஞர் மு. செல்லையா அவர்களின் கவிதைகளுக்கு உயிரோட்டம் கொடுத்து அதை மாணவச் சிறார்களூடாக வெளிக்கொணர்ந்த பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி தணிகாசலம் சரஸ்வதி அவர்களையே சாரும். பெற்றார் ஆசிரியர் தின விழாவிலும் இவரது இயக்கத்தில் பல நடனங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. இன்றும் அவற்றினைப் பார்த்த ரசிகர்கள் நினைவு கூர்ந்து பேசிக் கொள்வதைக் காணலாம். அல்வாய் வடக்கின் ஆனந்த சேமகே பௌத்த பாடசாலை இயங்கிய காலங்களில் யாழ்ப்பாணம் பௌத்த விகாரையில் கலை விழாக்கள் நடைபெறுவது வழமை. யாழ்ப்பாணத்தில் உள்ள சகல பௌத்த பாடசாலைகளும் பங்கு பற்றி நிகழ்வினை சிறப்புடையதாக்குவார்கள்.

அந்த விழாவில் கூட இவரது நெறியாள்கையில் நடனங்கள் மேலோங்கி எல்லோரையும் மகிழ்வித்திருக்கின்றது. இதில் ஆச்சரியப்படக் கூடிய விஷயம் என்னவெனில் அந்த நிகழ்வுகளில் பல சிங்கள மொழி பேசும் பௌத்த பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள். அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் பல சிறுவர் நடனங்களை அரங்கேற்றியுள்ளனர்.

ஒருமுறை இவரால் நெறியாள்கை செய்யப்பட்ட வரவேற்பு நடனத்தை விளங்கிக் கொண்ட சிங்கள மொழி பேசும் கல்வியாளர் அந்த நடனத்தின் அர்த்தத்தைப் புரிந்து மற்றையோரும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்கிணங்க சுமார் இருபது நிமிடங்களாக பாராட்டுரை வழங்கியதுடன் இவருக்கு சிறப்பும் செய்துள்ளார். இதில் ஆச்சரியப்படக் கூடியது யாதெனில் அவருக்குத் தமிழ் தெரியாது. தமிழ்த் தெரியாதவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் நடனத்தை வடிவமைத்து புரிய வைத்தமை மிகச் சிறப்புக்குரியது.

பல விதங்களில் பல முறைகளில் அவருடைய ஆளுமையை தொடர்ந்து பரிணமிக்க விடாது ஆக்கம் கொடுக்காத சமூகம் உண்மையில் இவற்றை நினைத்து வெட்கப்பட வேண்டும். இதுபோன்ற பல கலைஞர்கள் இசை, நாடகம், ஓவியம் என ஒவ்வொரு துறைகளிலும் திறமையுள்ளவர்களாக இருந்தார்கள் அவர்களைக் கூட இனம் கண்டு ஊக்கம் கொடுக்காது மங்கிப் போகச் செய்தமை கூட ஊரின் சாபக்கேடேயாகும்.

இனி வரும் காலங்களில் இவர்களைப் போன்றவர்களை ஊக்கப்படுத்தி பெருமை சேர்க்க வேண்டுமென விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு பராயத்து நினைவில்
# அமரர். திருமதி. சரஸ்வதி தணிகாசலம்

எம்முடன் நீண்டகாலம் வாழ்ந்தவர்கள் பற்றிய கதைகள் அவர்கள் அவர்கள் இறக்கும் தருவாயில் **பிம்பம்** மீதான அனுமானத்தை ஏற்படுத்தி விடுகின்றன. அதுவும் எமக்கு நன்கறிந்தவரெனில் அவர் பற்றிய நினைவுகள் படிமங்களாக மனதில் துருத்தி நிற்பது தவிர்க்க முடியாதது. அவ்வகையில் அண்மையில் காலமான திருமதி சரஸ்வதி தணிகாசலம் பற்றிய நினைவுகளும் படிமங்களாக மனதில் நிற்கின்றன.

எமதூரின் பாரம்பரியமிக்க குடும்பத்தைச் சேர்ந்த இவர் **சரஸ்வதி அக்கா** என எல்லோராலும் வாஞ்சையுடன் அழைக்கப்பட்டவர். இவர் தாரமாக வரித்துக் கொண்ட அதிபர் சி. தணிகாசலம் அவர்கள் ஒரு மாற்றுச் சிந்தனையாளராக விளங்கியவர். பாடசாலை ஒன்றை ஸ்தாபித்து பலரும் ஆசிரிய நியமனம் பெற மூலகர்த்தாவாக செயற்பட்டவர். அதனால் சமூக வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டவர்.

கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி எமது சமூகத்தின் முக்கியமான வளர்ச்சிக் கட்டமாகும். கல்வி, கலை பண்பாடு அரசியல் தளங்களில் இக்கால கட்டம் பல அதிர்வுகளையும் மாற்றங்களையும் சந்தித்தது. அக்காலத்து சிறுபராயத்து நினைவுகளை இன்றும் நினைத்து மகிழக்கூடிய பல மறக்க முடியாத அனுபவங்கள் உள்ளன. அவற்றுள் சரஸ்வதி அக்காவின் வாழ்வுடன் கலந்திருந்த கலை அரங்க செயற்பாடுகள் இன்றும் நினைவில் அழியாதன.

எமது இளமைக் காலத்தில் கல்வி கற்ற அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை கவிஞர் மு.செல்லையா தலைமை ஆசிரியராக இருந்த வேளை இயல், இசை, நாடக செயற்பாடுகளில் எழுச்சி கண்டிருந்தது. அதற்கு கவிஞரது பங்களிப்பு மகத்தானது அவருக்கு பக்கபலமாக துணையாக சரஸ்வதி அக்கா இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர அன்று பிரபலமான சினிமாப் பாடல்களுக்கும் நடனங்களை வடிவமைத்து காட்சிப்படுத்தினார். சிறப்பாக அன்று பிரபலமடைந்திருந்த டி.ஆர். மகாலிங்கத்தின் பாடலான **செந்தமிழ்த் தேன்மொழியாள் நிலாவெனச் சிரிக்கும் மலர்க்கொடியாள்** என்ற பாடலுக்காக அவர் பயிற்றுவித்த நடன அசைவுகள் இன்றும் மனதில் நிற்கிறது. ஒலிவாங்கியில் தன்னுடைய மெல்லிய குரலால் பாடி எம்மை மகிழ்வித்தார். அவரது குரலில் இழைந்து வரும் மென்மை அற்புத அனுபவமாக இருக்கும். அன்று நடனங்களை தாளகதியுடன் மேடையில் வடிவமைப்பதில் தேர்ந்தவராக சரஸ்வதி அக்கா இருந்தார். அத்துடன் நடனங்களுக்கு ஏற்ப ஒப்பனை செய்வதிலும் ஆடை அணிகளைத் தைப்பதிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். கலைகளின் உயிர்ப்பில் அவர் காட்டிய ஈடுபாடு அழம் செறிந்தது.

இக் கலைத்திறன்களையெல்லாம் அவர் தன் பள்ளி வாழ்க்கையில் கற்றுக் கொண்டார். சரஸ்வதி அக்கா தனது கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் விடுதி மாணவியாக இருந்து கற்றவர் என்பது குறிப்பிடக் கூடியது. அக்காலத்தில் பெண்களுக்கான கல்வி என்பது அவர் தம் வாழ்க்கைத் j‰d¡fis (Life Skills) வளர்க்கின்ற வகையில் அமைந்தது. இசை, நடனம், தையல், பன்னவேலை, கைப்பணி என்பன கலைத்திட்டத்தில் கவனிப்புக்குரியனவாக இருந்தன. இவற்றை முறையாக பயின்று தனது வாழ்வியலுக்கும் ஆதாரமாகக் கொண்டார்.

இத்தகைய திறன்களை இளமையில் கொண்ட சரஸ்வதி அக்கா இறுதிக் காலத்திலும் மகள், பேரப்பிள்ளைகளது அரவணைப்பில் மன அமைதியுடன் மகிழ்ச்சியாக வாழ்க்கையைக் கழித்தார். அவருடைய இறுதிக்காலம் உறவுகளிலிருந்து ஒதுங்கிய வைராக்கியமிக்க வாழ்வாகிப் போனது. அதுவே அவருக்கு இயல்பாகிப் போனது. அந்த வாழ்வில் ஆடம்பரமோ, அவஸ்தையோ, இழுபறியோ இருக்கவில்லை. வாழ்க்கை என்பது எப்படி அமைகிறதோ அதை அப்படியேதான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற புரிதலுடன் வாழ்ந்தார். அவர் தனது நீண்டகால வாழ்வை என்போதும் வலிமையுடனும், புன்முறுவலுடனும் எதிர் கொண்டார் என்பது தான் அவரது சிறப்பு.

**மு. அந்தரட்சகன்**
**நல்லூர்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குத் தெரிந்த என் அம்மா

பல ஆண்டுகள் தவமிருந்து மலடி எனப் பெயர் வாங்கி இறுதியாக தனது 41 வது வயதில் என்னைப் பெற்றெடுத்தார். என் அம்மா தனக்கு ஏற்பட்ட பல்வேறு இழப்புக்களையும் தாங்கி என் முகம் பார்த்து அவற்றை அடக்கி வைத்திருந்தார். எனது சிறுவயது முதற்கொண்டு எனக்கு துன்பம் தரக் கூடிய எந்த விடயத்தையும் என்னுடன் பகிர்ந்து கொள்ள மாட்டார். என் அம்மாவும் அப்பாவும் உளவியல் தொடர்பாக கற்றறிந்த விடயங்களையும் அனுபவரீதியாக பெற்றுக் கொண்ட விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு என்னைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தனர். அப்பாவின் வேலை நிறுத்தம் நாங்கள் சில ஆண்டுகள் பதுளையில் வசிக்க வேண்டி இருந்தது. அங்கு வாழ்ந்த காலத்தில் இனமத பேதமற்ற மனப்பாங்கு ஒன்றை என் மனதில் விதைக்க அவர் சிறந்த ஒரு வழிகாட்டியாக திகழ்ந்தார்.

நான் வேண்டிக் கொண்ட எல்லாவற்றையும் நிறைவேற்றித் தந்தார். 1997 ஆம் ஆண்டளவில் எனது தந்தை நோய்வாய்ப்பட்டு நடை குறைந்து இருந்த காலத்திலும் தந்தையின் குறை தெரியாது என்னை படிப்பித்து வைத்தார். எனது கணவரின் தந்தை அமரர் திரு.கந்தையா கதிரவேல் (பவளம்) அவர்களால் **தற்துணிவான பிள்ளை** என போற்றப்படும் அளவிற்கு என்னை வளர்த்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தனது சொந்தங்களுடனான தொடர்புகளை குறைத்து வைத்திருந்தாலும் அவர்கள் தொடர்பான சகல விடயங்களையும் எனக்குக் கூறியுள்ளார். தனது மாமன்மாரைப் பற்றி அடிக்கடி கூறுவார். அவர்களுக்கும் தனது சிறிய தந்தைமாருக்கும் தான் எவ்வளவு தூரம் செல்லப்பிள்ளையாக வாழ்ந்து வந்தேன் என்பதை கதைகதையாகச் சொல்வார்.

தனது மைத்துனர்கள், உடன்பிறவா சகோதரர்கள், பெறாமக்கள், மருமக்கள் ஆகியோரிடம் அவர் கண்ட நல்ல குணங்களை எடுத்துக்காட்டி கதைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் எங்கள் வீட்டிற்கு வந்தாலும் தனக்கு உணவு இல்லாவிட்டாலும் அவர்களை உணவருந்த வைத்து சந்தோஷப்படுவார். எல்லோரும் படித்து பெரிய பட்டம் பதவிகளை அடைய வேண்டுமென எந்தப் பிள்ளையைக் கண்டாலும் தட்டிக் கொடுப்பார். எமது சமுதாயம் முன்னேற படிப்பு தான் பெரும் துணையாக இருக்கும் என்பதை ஆணித்தரமாக நம்பினார்.

எனது அம்மாவின் இறுதிச் சடங்கிற்கு கொழும்பில் இருந்து கொரோனா தொற்றுக்கு பயந்து எல்லோரும் இருக்கும் நேரத்திலும் அவரது தந்தைவழி மைத்துனியின் மகளான திருமதி. கௌசலா உமாசங்கர் அவர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியமை என் அம்மா தன் பிள்ளையைத் தவிர ஏனையோரையும் வழிநடாத்தியுள்ளார் என்பதற்கு சான்றாக உள்ளது. அத்துடன் அம்மாவின் தாய் வழி மைத்துனியின் மகளான திருமதி ரதிகலா மரியதாஸ் அவர்கள் காணொளி மூலம் அம்மாவின் உடலைப் பார்த்து “இந்த உலகத்தை எனக்கு காட்டித் தந்தீர்கள்” எனக் கதறிய கதறல் இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. இதுவும் அவரின் பண்பை எடுத்துரைக்கிறது.

எனது அம்மாவின் மைத்துனர்கள் ஐவர் இப்போது இருக்கிறார்கள். நேரில் வர முடியாவிட்டாலும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அனுதாபச் செய்திகளை தெரிவித்த போது அவர்கள் நினைவில் என் அம்மா எவ்வளவு தூரம் பதிந்துள்ளார் என்பது தெரிய வந்தது. அத்துடன் ஒன்று விட்ட சகோதர சகோதரிகள் தமது உடன் பிறந்த உறவாக அம்மாவை நினைத்து வைத்துள்ளார்கள் என்பதும் எனக்குத் தெரிய வந்தது.

தனது பேரப்பிள்ளைகளுடன் அவர் கொஞ்சி விளையாடும் அழகு தனித்துவமானது. அவர்களும் அவரை தமது சக வயதினராக கருதி கதைப்பதும் விளையாடுவதாகவும் மகிழ்ந்திருந்தனர். அதுவும் “கொறோனாக்” காலத்தில் எல்லோரும் வீட்டிலிருந்த வேளை யாவரும் சேர்ந்து ஒன்றாக வாழ்ந்தமை என் அம்மா செய்த பெரும் தவப்பயனாகும் என நான் கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைப் பற்றி எனக்குத் தெரிந்த மிகச் சிலவற்றை மட்டுமே நான் இங்கு பகிர்ந்துள்ளேன். ஏனையவற்றை எழுதுமளவிற்கு என் கைகளும் கண்களும் ஒத்துழைப்பு தரவில்லை. அம்மாவைப் பற்றி கூறாது விட்ட விடயங்கள் தற்போதைக்கு ஒரு புத்தகத்தின் கிழிக்கப்பட்ட பக்கங்களாக இருக்கட்டும். வரும் காலத்தில் என் வடலிகள் பனைமரங்களாகி பக்கங்கள் யாவற்றையும் ஒன்று சேர்த்து புதிய புத்தகமாக வெளியிடும் என நம்புகிறேன்.

இறுதியாக என் அம்மாவைப் பற்றி நன்றாக தெரிந்து புரிந்து வைத்திருப்பவர்கள் என்றென்றும் அவரைப் போற்றி புகழ்ந்திடுவர் எனக் கூறி இதை நிறைவு செய்கிறேன்.



**இறைவன் உன்னை ஏழையாகப் படைத்திருக்கலாம் ஆனால் உனக்கு சிந்திக்க அறிவு என்ற ஒன்றைக் கொடுத்திருக்கிறான் அல்லவா....! அதுவே உன்னுடைய மூலதனம் அதை வைத்து முன்னேறு....!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகன் விஜயகுமார் அவர்களின் இதயத்திலிருந்து

மாமி நான் உங்களை எனது மாமியாக என் மனைவியின் அம்மாவாக பார்த்ததை விட நான் பெற்ற பிள்ளைகளின் அம்மம்மாவாக பார்த்ததில் மகிழ்ச்சியடைகின்றேன்.

என் பிள்ளைகள் நால்வருடன் உங்களையும் என் பிள்ளைகளின் ஸ்தானத்திலேயே வைத்திருந்தேன். அவர்களுடன் நீங்கள் பழகும் விதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் உங்களுக்கான எனது கடமைகளை குறைவின்றி செய்திருக்கிறேன் என நான் நம்புகிறேன்.

உங்களுடன் எனது நோய்வாய்ப்பட்ட தந்தை தாயையும் ஒன்றாக வைத்திருந்த போது எனக்கு சில நெருக்கடிகள் ஏற்பட்டாலும் அந்த நினைவுகளை, கலகலப்பான வீட்டுச் சூழலை நான் மீட்டிப் பார்க்கிறேன்.

உங்கள் பிரிவை நினைத்து என் பிள்ளைகள் கலங்கி நின்ற போது உண்மையில் நான் மனமுடைந்து விட்டேன். இறுதிக்காலம் வரை உலாவித் திரிந்த, சிரித்து மகிழ்ந்திருந்த வேளையில் நோயுற்ற போது உங்களை இறப்பின் பிடியிலிருந்து காப்பாற்ற இயலவில்லையே என்ற நெருடல் ஒன்று என் மனதில் இருந்து கொண்டே இருக்கிறது.

**வாழ பிடிக்கவில்லை என்றால் தற்கொலை செய்து கொள் ஆனால் தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு தைரியம் இருந்தால் வாழ்ந்து பார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரப்பிள்ளைகள்

அம்மம்மா! அம்மம்மா! என்று யாரை நாம் இனி அழைப்போம். உங்கள் வயது இறப்பை ஏற்றுக் கொள்ளக் கூடியது. ஆனால் நாங்கள் சிறுவர்கள் நாங்கள் மேற்படிப்பு படிப்பதை நீங்கள் காணவில்லையே. நீங்கள் இன்னும் 10 வருடங்களாவது எங்களுடன் இருப்பீர்கள் என்று கனவு கண்டிருந்தோம். அந்தக் கனவை உடைத்தெறிந்து நீங்கள் உங்கள் அம்மாவைத் தேடிச் சென்று விட்டீர்கள்.

எல்லா அம்மம்மாக்களைப் போல எங்களுக்கு உங்களால் இயன்ற பணிவிடைகளைச் செய்தாலும் ஒழுக்கத்தைக் கற்றுத் தந்தாலும் நாங்கள் செய்கின்ற குறும்புத்தனமான செயல்களையும் போடுகின்ற சண்டைகளையும் பார்த்து சிறிதும் சினக்காமல் எம்மை வெறுக்காமல் எம்மீது பாரபட்சம் காட்டாமல் இருந்தீர்கள். அதுதான் எங்களால் உங்கள் பிரிவைத் தாங்க இயலாமைக்கான காரணம் அம்மம்மா.

உங்கள் பிள்ளை, எங்கள் அம்மாவிற்கு நீங்கள் கொடுத்த செல்லங்களையும் வளர்த்த முறைகளையும் கேட்டு நாங்களும் எங்கள் அம்மாவிடம் அதை நாடி நிற்போம். செல்லப்பிள்ளையான உங்கள் பிள்ளை கஷ்டப்படுவாரே என நீங்கள் யோசிக்காமல் எங்கள் பக்கம் நின்று தான் நீங்கள் கதைப்பீர்கள்.நாங்கள் நேரத்தைக் கணக்கில் எடுக்காது விழித்திருந்தாலோ அல்லது நித்திரை கொண்டாலே அதைச் சுட்டிக்காட்டிய வண்ணம் இருப்பீர்கள். உடைகள் அணியும் விதம், அமர்ந்திருக்கும் முறை என்பவற்றை அவதானித்து திருத்துவீர்கள்.

நாங்கள் நால்வரும் நாலுவித தோற்றம் கொண்டவர்கள். நான் மூத்த பேர்த்தி ஷியோனி என்னை என் தம்பி **நவீன சரஸ்வதி** எனக் கூப்பிடுவார். அப்போது என் உள்ளத்தில் உருவாகும் உவகைக்கு அளவே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பார்த்து என் தங்கை கவலைப்படும் போது நீங்கள் அவளை அணைத்து தேற்றுவீர்கள்.

மூத்த பேரனான நான் ஆகர்ஷன். நான் பிறந்த போது நீங்கள் சிரித்தபடி பார்க்க வைத்தியசாலைக்கு வந்தீர்கள் என என் அப்பா கூறுவார். என் கைகளை அடிக்கடி பார்த்து பலன் சொல்லுவீர்கள் அது எனக்கு நல்ல சந்தோஷமாக இருக்கும். சிறுவயதில் இடிமுழக்கம் கேட்டாலும் அம்மாவிடம் செல்லாமல் அம்மம்மா எனக் கத்திக் கொண்டு உங்களிடம் தான் நான் ஓடி வருவேன். எந்நேரமும் என் இருக்கை உங்கள் மடியாகத் தான் இருந்தது.

உங்கள் இறுதிக்காலத்தில் ஏனோ தெரியவில்லை உங்களுடன் நான் நன்றாக ஒட்டிவிட்டேன். உங்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என அழுது அடம்பிடித்தேன். என்னைப் பார்த்து என் சகோதரர்களும் அழுதார்கள். அம்மம்மா உங்களைக் காப்பாற்றலாம் என நம்பி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம். நீங்கள் எப்போ வருவீர்கள் என வழிமேல் விழி வைத்து காத்திருந்தோம். இறப்பதற்கு முதல் நாள் உங்கள் உடல் நிலை தேறிவிட்டது எனக் கேட்டு கடவுளுக்கு எல்லாம் நன்றி சொல்லி ஆனந்தப்பட்டோமே ஆனால் அடுத்தநாள் இடியாக உங்கள் இறப்பின் செய்தியை எங்கள் அம்மா நேரே வீடு வந்து சொன்னாரே. உங்கள் இறப்பை இழப்பை என்னால் தாங்க முடியவில்லை. இரவிரவாக என் அம்மாவைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருந்தேன். யார் என்ன சொன்னாலும் உங்கள் இழப்பை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

மூன்றாவது பேர்த்தி சாருஷ்ணி, எனக்கும் உங்களைப் போல கலைகளில் ஆர்வம். அந்த ஆர்வ மிகுதியால் உங்களுக்கு விதம் விதமாக தலையிழுத்து ஒப்பனைகள் செய்வேன். எல்லாவற்றையும் புன்னகையுடன் ஏற்றுக் கொள்வீர்கள். நான் கீறிய படங்களைத் தொட்டுக் கும்பிடுவீர்கள். நானும் அக்காவும் சேர்ந்து ஆடும் நடனங்களைப் பார்த்து இரசிப்பீர்கள். என் பாடல்களை கேட்டு உற்சாகப்படுத்துவீர்கள். நாங்கள் உங்களுடன் சேர்ந்து எடுக்கும் படங்களுக்கு அழகாக ஒத்துழைப்பீர்கள். அம்மம்மா நான் உங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் விளையாட்டுத் தோழியாக நினைத்திருந்தேனே. எனக்கு கவலைகள் வரும் போது உங்களுடன் வந்து இருந்து அவற்றை விளையாடி மறப்பேனே. இறுதிவரை உங்களுக்கு அருகில் இருக்க அம்மாவைத் வேண்டினேனே. அம்மம்மா நீங்கள் எனக்கு வேண்டும் எப்போ வருவீர்கள் என காத்திருக்கிறேன்.

கடைசிப் பேரன் செல்லப் பேரன் அதிஷன் நான் உங்களைப் போல பரணி நட்சத்திரத்தில் பிறந்ததை இட்டு நீங்கள் பெருமிதம் அடைந்தீர்கள் என என் அம்மா கூறுவார். என் குழந்தைப் பருவம் உங்கள் மடியிலேயே கழிந்தது. சிறுவனாக நான் விளையாடித் திரிந்த போது என்னைப் பார்த்து இரசிப்பீர்கள். நான் கிரிக்கெட் துடுப்பை வீட்டினுள் இருந்து அசைத்துப் பந்தடிப்பது போல் பாவனை செய்வேன். நீங்கள் அதை விளங்காது ஏதோ தடியால் அடித்து விளையாடுவதாக கூறி என்னை பகிடி பண்ணுவீர்கள்.

எனக்கு பேய் என்றால் சரியான பயம் பகலில் குளிக்கும் போது கூட உங்களைத்தான் துணைக்கு அழைப்பேன். நீங்கள் உணவருந்திக் கொண்டிருந்தாலும் அதை வைத்து விட்டு வந்து குளியலறை வாசலில் அமர்ந்திருப்பீர்கள். இப்போ எனக்கு காவலுக்கு அழைக்க யாருமில்லையே அம்மம்மா. நான் "நுள்ளி" மகிழ யாருமில்லையே. நீங்கள் என்னிடம் வருவீர்கள் என நினைத்தேன். அண்ணா, அக்காமார் நீங்கள் வரவே மாட்டீர்கள் எனக் கூறிவிட்டார்கள். இருந்தும் நான் உங்களுக்காக காத்திருக்கிறேன்.

ஓம் சாந்தி

**இறப்பு என்பது பெரிய இழப்பல்ல. உறவுகளை இழந்து உயிருடன் இருப்பது தான் பெரிய இழப்பு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *To our lovely ~~ammamma~~ friend*

Ammamma, your smiling face is still captured in our eyes. More than a mother and as a good friend we felt a consistent love of you. You lived a quite long life. But for us, you left too early. Though we miss your hugs and kisses we still cherish you. Ammamma,

Your heart,
Whiter than the petals of the white lotus
Which bloom from the deepest and the thickest mud.
The immortal smile you adorned
Revive the mortals back to life.
Dulcet voice,
Despite the wrinkled skin of age
Never lost its pitch.
Your determined thoughts,
Stronger than the strongest iron.
Your love is the universe,
Never ends and ever expands.
Your non-luxurious appearance,
Embodies divinity
With a nimbus of great splendor.
In your name abodes Saraswathy
The goddess of wisdom and art.
And you abode in our lotus of the heart
Forever with us.



Ammamma, let's take a trip in our memory lane.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

When we were younger, we follow you copycatting whatever you do, like how you eat, how you write, how you comb your hair and all. You give us food with your hands if we refuse to eat. You teach us some songs, thirukkurals, and thevarams. Also, you teach us dance steps and methods to do exercise. Being an expert artist, you encourage us and gives us advice in aesthetic activities. You treasure your childhood memories with us. Still remember, we put pearl necklaces on our pet hens, hearing that you did the same when you were young like us. Also, you say that you never cried at your school as your mother said not to cry before anyone.

You keep things routine and punctual. It was quite annoying when you knock on the bed to wake up us early in the morning and scolds us if we were late to sleep: p. You often tell us good habits, point out if we did wrong. We learned to consume less water and other resources without wasting them. You never wasted even a piece of paper. It may because you studied in a boarding school.
You used to take us on "uppumootai" when we were small. You prepare tasty meals for all of us. You thread needles yourself and stitches dresses for us and covers for furniture. Mesmerizingly, you did all these despite your age. You were strong both in your mind and physique.

Days over days, we became thick friends. We play together, sings together and watch TV together. Sweat are the days we all together catnap on the bed where our pet cat joins us too. We put you makeup



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and nail polish, styles your hair with trending hairstyles. Surprisingly, you had thick, dense hair with only a few white hairs. We learned to put braids on your hair. You calmly allowed us to do all those on you. Probably, the phone's gallery fills with your photos with different poses plus our beautiful selfies. How cute were you when you asked for skipping rope to join us to skip at 90?

You always reserve a small amount of food on your plate for the pets as an ardent pet lover.

It's exciting when you grab our hands to read palm line to tell good fortune. We also learned a bit of palmistry from you. You always ask us to be doctors in the future. Not only us but also you tell any children you meet to study hard and to become a doctor.

We open your cupboard without your knowledge to examine the old things you used in the past. Thecolourful old book on embroidery is the most eye-catching. Your neatly written letters both in Tamil and English, the designs you drew all inspired us. We love the uniquely designed dresses you made for our mother that we saw in the old photos. We feel jealousy to see those elegant dresses. You must have been a good fashion designer.

We heard that you were a bright student at school and do math well. Moreover, we learned that during your training once you knit a basket only by seeing it that others didn't. Amazingly, you never took measurements to stitch clothes. You had the ability to do things measuring with your eyes. Also, we come to know that you nicely choreographed dances for competitions. Indeed, you are an intelligent and creative one who is one in thousands.

We come to know much more about you after you're gone. To be said, you are an actual iron lady, stronger than iron was your mind. You



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

broke the rules of an ordinary life. You made a revolution. You didn't just hurdled the obstacles but made them vanished. You rebuilt the school which was razed to the ground, in one night. It testimonies how obstinate were you in your goal. You fought for injustice. You've been the leader in the women's association. You served people with hunger. Sheltered many to educate them.

To be honest, you lived as a new-aged woman of Bharathi.

***"Nimirntha nannadai nerkonda paarvayum nilaththil yaarkkum anjaatha nerigalum....."***

The words perfectly matches you.

Ammamma, with all the scars and sorrows in your life you lived long for us up to 91 years. If not you would have crossed 100.

Ammamma, you showered dews of love on us. You are the greatest gift from our mother. You lived selflessly only for us.

We never knew what sadness is before. We never knew whatloss is before. You showed us all that in a second. Happy were the days you were with us. Now ammappa and you are all around us as a god protecting us where ever we go.

You had put a strong foundation. You had a dream. The dream you had, we will definitely accomplish it. Cause, we are your grandchildren.

Yours lovely



**grandchildren,**
**Shiyeni**
**Aagarshan**
**Sarushni**
**Atheishan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிய தந்தையார் இ. இராசையா சார்பாக

எனது மூத்த அண்ணன் முத்தையாவின் மூத்த புதல்வியான அமரர் சரஸ்வதி அவர்கள் தனது 70 வயது வரை எம்மூரில் வாழ்ந்து வந்தார். நான் என் பெற்றோருக்கு கடைசி மகன். அதனால் அமரர் அவர்களுக்கும் எனக்கும் ஏழு எட்டு வயதுதான் வித்தியாசம்.

சிறு குழந்தையாக அவர் இருந்த போது சரஸ்வதியே குழந்தை வடிவில் வந்தது போல் எங்களுக்கு இருக்கும். அவர் தோற்றத்தில் என்னை ஒத்திருந்ததால் "உன் பிள்ளைதான்" என என்னிடம் பெரியவர்கள் கூறி கிண்டலடிப்பார்கள். அதனால் சரஸ்வதியை நான் யாருக்கும் தெரியாமல் தான் தூக்கி முத்தமிடுவேன்.நாங்கள் மூவர் ஆண்பிள்ளைகளாக அவருக்கு சிறிய தந்தைமார்களாக இருந்தோம். கோவிந்தசாமி (தேசிங்கர் - துன்னாலை), கந்தசாமி (அல்வாய்) ஆகியோர் இருவரும் ஏனையோர் ஆவர். எங்களை விட எங்களுக்கு ஒரு அக்காவும் இருந்தார். நாங்களும் எங்களது உடன் பிறவா சகோதரர்கள் நிறைய பேரும் அமரர் அவர்கள் சிறுவயதாக இருந்த போது போட்டி போட்டு செல்லம் கொடுப்போம்.

நான் நினைக்கிறேன் நான் அவருடன் பழகிய காலம் வரை எங்களுடன் கதைக்கும் போது அவர் செல்லக் குரலில் தான் கதைப்பார். எங்கள் அண்ணி அமராவதியைப் போல என் பெறாமகளும் நான் அவர்கள் வீட்டுக்குச் சென்றால் நன்றாக உபசரிப்பார். இறுதிக் காலங்களில் நான் அவரைச் சந்திக்கவில்லை. ஆனால் அவரின் படங்களைப் பார்த்து தொட்டு கும்பிட்டுள்ளேன். அவரின் இயல்புகளை சுருக்கமாக ஒரே ஒரு சொல்லில் சொன்னால் அவர் ஒரு "இரும்புப் பெண்மணி".

எனது பெறாமகளை என்மகள் போல் நினைத்திருந்த அவரை 20 வருடங்களாக பிரிந்து வாழ்ந்துள்ளேன். அவர் தனது மகள், மருமகன், பேரப்பிள்ளைகளுடன் சந்தோஷமாக வாழ்வதைக் கேட்டு மனம் ஆறுதல் அடைந்திருந்தேன். இருப்பினும் அவரின் பிரிவு எனது இந்த தள்ளாத வயதிலும் துன்பத்தையே தருகிறது.

ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்டுப்பார்க்கிறேன்....

கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்
சரஸ்வதி அக்கா...

நீங்கள் என் தாய்க்கு சமமான வயதைக் கொண்டிருந்தாலும் உங்களை அக்கா என்றே அழைப்போம். எமது வீடும் உங்கள் வீடும் அண்மித்ததாகவே இருக்கும். அரசடி விநாயகர் ஆலயத்தின் பின் வீதிப்புறம் உங்கள் வீடு... கலகலப்பான குடும்பம், நீங்கள் உங்கள் கணவர் தணிகாசலம் ஆசிரியர், சர்வேந்திரா, அமராவதி ஆச்சி இவ்வளவுபேருமே உங்கள் குடும்ப அங்கத்தவர்கள். அப்படியிருந்தும் உங்கள் வீட்டில் வளர்ப்பு பிள்ளைகளாக தங்கவேல், அம்பிகா, ஜெயா, ரதிகலா எனப்பலர் வாழ்ந்து வந்தனர். காரணம் உங்களுக்கு நீண்டகாலமாக பிள்ளைகள் இல்லை. சர்வேந்திராக்கா உங்கள் தங்கையாக இருந்தாலும் சொந்தப்பிள்ளையாகவே உங்களோடு வளர்ந்தார்.

நாங்களும் உங்கள் பிள்ளைகள் போலவே அந்நியோன்யமாக வாழ்ந்தோம். உங்கள் வீட்டின் நன்மை தீமைகளுக் கெல்லாம் நாங்களும் நிற்போம். அப்போது எனக்கு வயது எட்டு. திடீரென ஓர்நாள் உங்கள் தங்கை சர்வேந்திராக்கா மரணம் எங்களையெல்லாம் கவலை கொள்ள வைத்தது. கவலைகளோடு உங்கள் வாழ்க்கையும் கடந்து சென்றது. நீண்ட நாட்களின் பின் உங்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தாள் அவளுக்கு மரணித்துப் போன தங்கையின் பெயரைச் சூட்டி மகிழ்வு கொண்டீர்கள். ஒற்றைப்பிள்ளையாக அவளை பொத்திப் பொத்தி வளர்த்தீர்கள். இன்று அவளின் உச்சமான கல்வியின் பயனாக நல்ல பெறுபேறுகளுடன் நல்ல கல்வித்தகமைகளோடு கணவனைக் கைப்பிடித்து வாழ்கிறாள். நீங்கள் வீட்டு வளர்ப்பு பிராணிகளிடமும் கொண்டிருந்த அன்பினை இன்றும் ஒருமுறை மீட்டுப்பார்க்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வீட்டில் வளர்ப்பு பிராணியான ஆடுகளுக்கு சின்னராணி, பெரியராணி எனப் பெயர்சூட்டி அழைத்தமையும் உங்கள் வீட்டு செல்லப்பிராணியான நாய்க்கு கலீன் எனப் பெயர் சூட்டியும் அழைப்பதைப் பார்த்துதான் நாமும் எமது வீட்டுப்பிராணிகளுக்கு பெயர்சூட்டி அழைத்தோம்.

அன்பு என்ற வார்த்தையின் அர்த்தங்களை உங்களிடத்தில் கற்றுக்கொண்டோம். சிறுவர்களின் பூங்காவாக திகழ்ந்த அரசடி விநாயகர் ஆலயத்தின் பின்வீதி சோபை இழந்துள்ளது. நாமும் புலம்பெயர்ந்து முப்பது ஆண்டுகளாகிவிட்டன.அதேபோல் நீங்களும் அங்கிருந்து திருகோணமலைக்கு இடம்பெயர்ந்து பல ஆண்டுகளாகி விட்டன. திடீரென உங்கள் மரணச் செய்தியை முக நூலூடாக அறிந்து கவலையடைந்தோம். இருப்பினும் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து விட்டுத்தான் சென்றீர்கள் என்பது ஆத்ம திருப்தி தருகிறது. நான் மட்டும் மறுபிறவி என்ற கோட்பாடுகளில் உடன்படாதவனாக பிடிவாதக்காரனாக கடந்து செல்வதால் மீண்டும் ஒருமுறை பிறந்து வாவென சொல்லிக் கொள்ளமுடியவில்லை.. அந்த ஆலய வீதியில் உங்களது நடமாட்டமும் செல்லப்பிராணிகளை சின்னராணி, பெரியராணியென அழைக்கும் சப்தமும் இன்னும் கேட்டுக் கொண்டே இருக்கிறது. அங்கு சிறுவர்களாக நாம் துள்ளித்திருந்த காலமும் மீண்டும் ஒருமுறை வந்து போகாதா? என்கிறது அந்தச்சூழல்......

**பழம் பெரும் ஞானிகள் ஆசான்களிடம் சரியாக கற்று தேர்ந்தாலும் கூட உன் வாழ்க்கையில் நீ கண்ட அனுபவங்களே உன்னை ஒரு சிறந்த மனிதனாக மாற்றும் வல்லமை பெற்றது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்தாமரைக்கு அன்றி நின்பதம் தாங்களன் வெள்ளை உள்ளத்
தண்தாமரைக்குத் தகாது கொலோ சகம் ஏழும்அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகலகலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்து அருள்வாய் பங்கய ஆசனத்தில்
கூடும் பசும் பொற்கொடியே கனதனக் குன்றும் ஐம்பால்
காடும் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே!

அளிக்கும் செந்தமிழ்த் தெள் அமுது ஆர்ந்து உன்அருட் கடலில்
குளிக்கும்படிக்கு என்று கூடுங் கொலோ உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவல் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகலகலாவல்லியே!

தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்து அருள்வாய் வடநூற் கடலும்
தேக்கும் செந்தமிழ் செல்வமும் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலாவல்லயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்பு இதம்தரும் செய்ய பொற்பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராதது உன்னே நெடுந்தாள் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகலகலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொல் பனுவலும் யான்
எண்ணும் பொழுதுஎளிது எய்தநல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே சகலகலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும் கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய் நளின ஆசனம் சேர்
செல்விக்கு அரிது என்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலம் தோய்புழைக்க
நற்குங் சரத்தின் பிடியோடு அரசு அன்ன(ம்) நாணநடை
கற்கும் பாதாம்புயத்தாளே சகலகலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்ட அளவில் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவள்ளியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எங்களின் குடும்பத்தின் ஒளி விளக்காய் விளங்கிய

அன்புத் தெய்வம்

# அமரர். சரஸ்வதி தணிகாசலம்


எமது தெய்வம் நோயுற்றிருந்த வேளை அவருக்கான வைத்திய வசதிகளை வழங்கிய திருகோணமலை மாவட்ட பொது வைத்திய சாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கும், அவருக்கான மரணச் சடங்கில் உதவிகள் பல புரிந்தவர்களுக்கும் நேரிலும் தொலைபேசியூடாகவும் இணையத்தினூடாகவும் அனுதாபச் செய்திகளைப் பகிர்ந்தவர்களுக்கும் பதாதைகளைக் காட்சிப்படுத்தியவர்களுக்கும் குறிப்பாக தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி பாடசாலைச் சமூகத்தினருக்கும் இந்த நினைவு மலரை உருவாக்க நடுநாயகமாக நின்று உழைத்த திரு.ஏ.ஜி.யோகராஜா (சுவிஸ்) அவர்களுக்கும் இந்நூலிற்காக ஆக்கங்களை அனுப்பி வைத்தவர்களுக்கும் மற்றும் ஏனைய வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியையாக கடமையாற்றிய போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SS Digitals : 0777 695 636